NAME : D. SEETHALAKSHMI
Class : II B.Ed

Unit test - I  Subject : pedagogy of Tamil

1. மொழிப் பாடத்தின் நோக்கங்களை வகுத்து எழுதுக ?

* தாய்மொழிக் கற்பித்தலின் முக்கிய நோக்கம் திருத்தமாகப் பேசவும், தெளிவாக படிக்கவும், அழகாகப் பிழையின்றி எழுதவும் பயிற்சியளித்தலே ஆகும்.

* மேலும், தாய்மொழிக் கற்பித்தல் என்பது,

* சிந்தனையை வளர்த்தல்,
* சொற்களஞ்சியப் பெருக்கம்,
* படைப்பாற்றலை வளர்த்தல்,
* எண்ணத்தை வெளியிடும் கருவியாகவும்,
* திருத்தமாக பேச, வாசிக்க, எழுதவும்
* கற்பனையாற்றலை வளர்த்தல்,
* அழகுணர்ச்சியாற்றலை வளர்த்தல்,
* சமூகப் பண்பாட்டு மரபினையறியும் கருவி,
* சமூக கடமைகளை மேற்கொள்ளுதல்
* வாழ்க்கையை நடத்த தேவையான திறன்களைப் பெறுதல்

போன்றவற்றை குறிக்கிறது.

சிந்தனையை வளர்த்தல் :

* மாணவர்களுக்கு இளம் வயதிலிருந்தே சிந்தனை ஆற்றலை வளர்க்க வேண்டும். இது ஆசிரியரின் முதற் கடமையாகும். அதற்கு ஏற்ற கருவியாக இருப்பது தாய்மொழியே. பேசப் பெறும்

TNPL

சொல்லுக்கும், அது குறிக்கும் பொருளுக்கும், பேசுவோருக்கும் கேட்போருக்கும் நேரடியான தொடர்பை உண்டாக்குவது மொழியே ஆகும்.

சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்.

* மாணவர்களுக்கு பொருள் விளங்கும் சொற்களின் எண்ணிக்கையை அதிகமாக்குதல் அதிகமாக்குதல் வேண்டும்.

* தொடக்க வகுப்புகளில் சிறப்பாக நாளும் நடைபெறும் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்தும், செய்தித்தாள்களிலிருந்தும் திட்டம் சொற்களையறிவதும், மேல் வகுப்புகளில் இலக்கியங்களைப் படித்து இன்புறுவதற்கான அருஞ்சொற்களின் பொருளை அறிவதும், மொழிப்பாட நோக்கங்களுள் ஒன்றாகக் கொள்ளலாம்.

படைப்பாற்றலை வளர்த்தல்.

* மனித இனம் தன் அறிவு நிலைக்கேற்ப எதையாவது ஒன்றைப் படைக்க வேண்டும் என விழைகிறது.

* குழந்தைகள் மணல் வீடு கட்டுவதும், தாள்களில் கிறுக்கி ஓவியம் வரைதலும் படைப்பாற்றலின் எழும் உணர்வுகளே.

* கட்டுரைகள், நாடகங்கள், சிறுகதைகள், புதினங்கள், கவிதையாற்றல் போன்றவற்றில் படைப்பாற்றலைத் தூண்டி மாணாக்கர்களைச் சிறந்த படைப்பாளர்களாக மாற்றலாம்.

* இந்நோக்கங்களை நிறைவேற்ற மொழிப்பாடமே சிறந்ததாகும்.

Scanned by CamScanner

**எண்ணத்தை வெளியிடும் கருவி :**

* தாய்மொழியின் மூலமாகத் தான் நம் எண்ணங்களையும், கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் சிறந்த முறையில் வெளிப்படுத்த முடியும்.

* கடந்த காலத்தில் நிகழ்ந்தவற்றை நினைவுக்குக் கொண்டு வந்து அர்ணிக்கும் மனப்பான்மையைக் கூறுகின்றோம்.

**திருத்தமாகப் பேச, கேட்க, வாசிக்க, எழுத.**

* ஒரு பொருளைப் பற்றி எளிய முறையில் தெளிவாகப் பேசவும், அழகாகப் பிழையின்றி எழுதவும், ஒரு பொருள் பற்றி ஒருவர் பேசுவதைக் கேட்கவும்,

* கேட்டு பொருள் உணரவும், ஒரு பொருள் பற்றித் தெளிவான முறையில் படிக்கவும் படித்துப் பொருள் உணரவும், தாய்மொழி மனிதனுக்கு மிகவும் பயன்படுகிறது.

**கற்பனையாற்றலை வளர்த்தல் ;**

* இலக்கியத்தின் முக்கியக் கூறுகளுள் ஒன்று கற்பனை. கவிதைக்கு இன்றியமையாதது இதுவே.

* உணர்ச்சிகளின் நிலைக்களனாக எழுதப்பெறும் எல்லா வகையான இலக்கியங்களுக்கும் கற்பனையாற்றல் மிகவும் இன்றியமையாதது.

அழகுணர்ச்சியை வளர்த்தல்:

* இலக்கிய ஆசிரியரின் புலன்களாலும், கற்பனையாலும் கண்டதை அவன் படைத்த இலக்கியங்களைப் படிக்கும்போது நம்மையும் காணச் செய்கிறார்கள்.

* அழகுணர்ச்சி என்பது அழகானவற்றை சுவைக்கும் ஓர் ஆற்றல் அழகானவற்றை ஐம்புலன்களாலும் கற்பனையாலும் கண்டதை காணலாம்.

சமூகப் பண்பாட்டு மரபினையறியும் கருவி:

* மொழியறிவு உண்மை அறிய உதவும் ஓர் உன்னத கருவியாகும்.

* மனிதனுக்கு வேண்டிய சமூகப் பண்பாட்டு மரபினை வழிவழியாக கொண்டு சேர்ப்பது மொழியே ஆகும்.

* ஈகை, அன்பு, நட்பு, போன்றவற்றை பிற இலக்கியங்களிலும், சமூகப் பண்பாட்டுமரபுகளும் கற்றுத்தருகின்றன.

கல்வியின் இன்றியமையா சூழ்நிலை:

* தாய்மொழியை ஒருவனுக்கு கற்றுக்கொடுத்தால் அவன் சூழலை அறிவான், சிந்தனை செய்வான், தொடர்புகளைத் தெரிந்து கொள்ள அவைகளைச் சரிசெய்வான்.

* அனைத்துக்கும் மேலாக சரியான முடிவினை எடுப்பான் என்ற கருத்து அறிஞர்களால் கூறப்படுகிறது.

* தாய்மொழியின் சிறப்புக்கு இதுவும் ஒரு சான்றாகும்.

Scanned by CamScanner

DATE / /

சமூகக் கடமைகளை மேற்கொள்ளுதல்

* மொழியின்றால் சமூகம் வளர்ச்சி பெற முடியாது.

* சமூக பண்டைய மரபுகளை சிதைத்து அழியாது காத்து அவற்றை புதுத் தலைமுறையினரிடம் சேர்ப்பது மொழியே ஆகும்.

* சமூக மரபில் அடங்கியுள்ள இலக்கியங்களின் அறிவு, கலைகளின் வழி, அம்மரபின் வரலாறு, அடிப்படைக் கருத்துக்கள், வாழ்க்கை மதிப்புகள் ஆகியன பற்றிய தெளிவு ஆசிரியருக்கு இன்றியமையாதது ஆகும்.

* சமூகக் கடமைகளை நங்கள் தனி நலனுக்கு மேம்பட்டதாகக் கருதி வளர்த்தல் வேண்டும்.

வாழ்க்கை நுகர்வுகளை எதிர்கொள்ளுதல்:

* கல்வி நிலையங்களை விட்டு வெளியேறும் மாணவர்கள் வாழ்க்கையில் நுழையும் போது தேவையான திறன்களை பெறவும், சமூதவும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

* நல்லொழுக்கம், இறையன்பு உள்ளிட்ட தனிமனிதப் பண்பாட்டைப் பண்புகளைப் பெற்றிடவும் தாய்மொழியானது முதன்மையானது.

TNPL

2. தேசியக் கல்விக் கொள்கையை விளக்கி எழுதுக.

* சுதந்திரத்திற்கு முன் இந்தியக் கல்வி

i) வேதகாலக் கல்வி முறை

ii) பௌத்தக் கல்வி முறை

iii) சமணக் கல்வி முறை பின்பற்றப்பட்டது.

* சுதந்திரத்திற்கு பின் இந்தியக் கல்வி

1948 - டாக்டர் இராதாகிருஷ்ணன் குழு

1952 - டாக்டர் ஏ.எல். முதலியார் குழு

1964 - டாக்டர் கோத்தாரி குழு

இக்குழுவின் பல்வேறு பரிந்துரைகளைப் பரிசீலித்து அவற்றைச் செயல்படுத்த முயன்று வருகின்றன.

1986-ம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கை:

* பள்ளிக் கல்வியை எல்லா நிலைகளிலும் ஒரு சீராக ஏற்க வேண்டுமென்று இக்கல்விக் கொள்கை கூறுகிறது.

* மேல்நிலை இரண்டாம் ஆண்டு வகுப்புகளில் தொழில் சார்புள்ள கல்விக்கு முக்கியத்துவம் வேண்டுமென்றும், தொழில் கல்வி பெற்ற மாணவர்கள் மேல்நிலை இரண்டாமாண்டு படித்த பின்னர், சுயவேலையில் ஈடுபட்டுத் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டுமென்றும் இதனால் அறிகிறோம்.

* பல்வேறு வகையான தொழில் துறைகள் பரிந்துரைக்கப் பட்டுள்ளன.

* பொதுக் கல்வியின் தரம் உயர்த்தப்பட்டு, சிறப்புற மாணவர்க்கு அளிக்கப்பட வேண்டும். அவ்வாறு இருப்பின் இளைஞர்கள் மேல் நிலைப் பள்ளி இரண்டாமாண்டு படித்த பின்னர், பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளில் சிறக்கும் வகையில் கல்வியில் ஈடுபட வேண்டும்.

Scanned by CamScanner

*பள்ளித் துறையில் கிராமச் சிறுவர், சிறுமியர்களுக்கு நவோதயாப் பள்ளிகள் தொடங்கப்பட வேண்டும்.

*திறமைமிக்க, கிராமப்புறத்தை சேர்ந்த சிறுவர், சிறுமியருக்கு சிறப்புமிக்க கல்வியை கற்பிக்கும் நோக்கத்துடன் தொடங்கப்படும்.

* இப்பள்ளிகளுக்கு மத்திய அரசு அனைத்து உதவிகளையும் செய்ய ஆயத்தமாக உள்ளது.

* மாணவனின் படைப்பாற்றலையும், தனிப்பட்ட திறமைகளையும் வளர்க்க நவோதயாப் பள்ளிகள் ஆவனசெய்யும் மற்ற பள்ளிகளோடு ஒப்பிடுங்கால்,

* இவற்றில் பல சிறப்பு அம்சங்களைக் காணலாம்.

*பொதுப்பள்ளிகளைப் போன்று சிறந்த பள்ளிகளாக இவை இயங்கும்.

*தேசிய ஒற்றுமைக்காகவும், மாணவர் திறமை வளர்க்கவும்

* உயர்நிலைப் பள்ளிகளும், அனைத்துக் கல்விக் கூடங்களும் பணிபுரிய வேண்டுமென்று

* இப்புதிய தேசியக் கல்விக் கொள்கை வலியுறுத்துகிறது.

TNPL

Scanned by CamScanner

3. தொடக்கப் பள்ளிகளில் பயிற்றுமொழியாக தமிழ் எவ்வாறு விளங்குகிறது?

* முதல் ஐந்து வகுப்புகளையும் படித்து முடிக்கின்ற நிலையில் மாணவர்கள் தாமாகவே நன்றாகப் படிக்கவும் தவறு இன்றிப் பேசவும் தெரிந்து கொள்ள வேண்டும்.

* ஐந்தாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திவிடினும் செய்தித் தாள்கள், இதழ்கள், சிறுகதை நூல்கள் போன்றவற்றைத் தாமாகப் படித்துப் புரிந்து கொள்ளுமளவு மொழித்திறமை பெற முதன்மைக் கல்வி பயன்படுகிறது.

* செந்தமிழும் நாப்பழக்கம் என்பது போல எழுத்துக்களைக் கூட்டி வாசிக்க பயிற்சியளிக்கப் -படுகிறது.

* சொற்களஞ்சிய அறிவும் அதிகப் போற்றப்பட வேண்டியதாகும். பேச்சுத்திருத்தமும் எழுத்தறிவுத்திறனும் சேர்ந்தே நடைபெற வேண்டும்.

* தமிழ்மொழி பயிற்சியளிக்கும் போது நன்கு தெரிந்த சொற்களை முன்னும், அரைகுறை தெரிந்தவை அடுத்தும், தெரிந்திருக்க வேண்டியவை பிறகும்

* என இவ்வாறு வரிசை முறையில் சொற்பட்டியல் அமைத்தல் வேண்டும்.

* கைப்பழக்கம் அதிக இன்றியமையாது கவனிக்கவேண்டியதாகும் 'சித்திரமும் கைப்பழக்கம்' என்று.

* படங்களையோ, கரும்பலகையிலோ, கோடு, வட்டம், கோணம் என கிறுக்கிப் பழகிய குழந்தைக்கு எழுத்துக்களையும், சொற்களையும் தர வேண்டும்.

4. இடைநிலைப் பள்ளிகளில் தமிழ் எவ்வாறு பயிற்றுமொழியாக வளர்கிறது?

*ஐந்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தமிழைத் திருத்தமாகப் பேசவும், எழுதவும், பொருளுணர்ந்து படிக்கவும் திறனைப் பயிற்சி பெற்றிருப்பர்.

*அவர்களது தமிழ் அறிவை மேலும் வளர்க்கும் வகையில் ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புகளுக்கான பாடத்திட்டம் அமைதல் வேண்டும்.

*இவ்வகுப்புகளில் மாணவர்களுக்கு இலக்கியக் கதை உணர்திறனை வளர்த்தலோடு, சொற்களஞ்சிய அறிவைப் பெருக்கி தமிழ் மொழியைப் பிழையறப் பேசவும் பயிற்சி அளித்தல் வேண்டும்.

*எட்டாம் வகுப்போடு படிப்பை முடித்துக்கொள்ளும் மாணவர்கள் தாங்களாகவே மொழியறிவை வளர்த்துக் கொள்வதற்கான முறையில்

*கதை, கட்டுரை, நாடகம், கவிதை ஆகியவற்றைப் படித்துணர்வதற்கும்

*கடிதங்கள் எழுதுவதற்கும், அகராதியைக் கையாளுவதற்கும் இவ்வகுப்புகளில் பயிற்சி அளித்தல் வேண்டும்.

*தமிழ்ப் பாடத்திட்டத்தை நன்கு திறனுடன் அனுபவ முறையில் கையாள,

*இலக்கிய மன்றங்களில் மாணாக்கர்களை நடிப்புடன் பாட்டு ஒப்பித்தல், இனிமையாகப் பாடுதல்.

*சிறந்ததொரு உரைநடைப் பகுதியை மெய்ப்பாட்டுடன் ஒப்பித்தல், சிறு சொற்பொழிவாற்றுதல் முன்னமே மனப்பாடம் செய்து ஒருவர் கொடுத்த வாதம் புரிதல் போன்றவற்றிற்கு வாய்ப்பளிக்க வேண்டும். இதற்கு தாய்மொழி பெரிதும் உதவியாக வளர்கிறது.

DATE / /

5. கலைத்திட்டத்தில் தாய்மொழியின் பங்கு ?

விடை * கலைத்திட்டத்தில் இடம் பெறும் பாடங்கள், செயல்பாடுகள், அனுபவங்கள் அனைத்தும் பயனும் நோக்கமும் உடையன.

* தாய்மொழியின் சிறப்புகளால் அதன் பயன், தேவை பெரிதென்பது உறுதியாக்கப்படுகிறது.

* நமது தாய்மொழியாம் தமிழின் பயன் நேரடியாகவும், மறைமுகமாகவும் அதே சமயத்தில் தொடர்ந்தும்

* நெடிய நாளைக்கு அமைந்து வருவதால் கலைத்திட்டத்தில் தமிழின் அம் சிறப்பாடமாக நிலைத்து வருகிறது.

* கலைத்திட்டத்தில் தமிழில் அமைதல், மாணவர்களுக்கு எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

* தாய்மொழி கற்கும் அனைவருக்கும் பயன்படும் நிலையில் பயிற்றுமொழியாக அமையும் பாண்மையில் உள்ளது.

* தாய்மொழி கல்லாமல் கலைத்திட்டம் முழுமை பெறாது.

Scanned by CamScanner

6. சமூகப் பண்பாட்டு மரபினை அறியும் கருவி - மொழி எங்ஙனம்?

* மொழியறிவு உலகை அறிய உதவும் ஓர் உன்னத கருவியாகும்.

* மனிதனுக்கு வேண்டிய சமூகப் பண்பாட்டு மரபினை வழிவழியாக கொண்டு சேர்ப்பது மொழியே ஆகும்.

* சமூகப் பண்பாட்டை வாய்மொழியாகவும், இலக்கியங்கள் மூலமாகவும் அறிய உதவும் கருவியாக மொழி உள்ளது.

* ஈகை, அன்பு, நட்பு போன்றவற்றை பிற இலக்கியங்களிலும், சமூகப் பண்பாட்டு மரபுகளும் கற்றுத் தருகின்றன.

7. வாழ்க்கை நகர்வுகளை எதிர்கொள்வதற்கு மொழி எவ்வாறு துணைபுரிகிறது?

* கல்வி நிலையங்களை விட்டு வெளியேறும் மாணவர்கள் வாழ்க்கையில் நுழையும் போது தேவையான திறன்களை பேசவும், எழுதவும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

* நல்லொழுக்கம், இறையன்பு உள்ளிட்ட தனிமனிதப் பண்பாட்டுப் பாங்குகளை பெற்றிடவும் தாய்மொழி முதன்மையானது.

8. இரண்டாவது மொழியாக தாய்மொழி கற்பித்தல் ஏன்?

தாய்மொழி அல்லாத பிறமொழியினை முதன்மை பாடமாக எடுத்து படித்த மாணவர்களுக்கு இரண்டாவது மொழியாக தமிழ்மொழியை கற்பித்தல் ஆகும்.

(எ-டு)

இரண்டாவது மொழியாக தமிழ்மொழியை

TNPL

Scanned by CamScanner

கற்பிக்கும் போது அடிப்படை எழுத்துக்களில் இருந்து மொழிப்பாடத்தை ஆரம்பிக்க வேண்டும். (அ, ஆ---- க, ங, ச...)

* அன்றாடம் பயன்படுத்தக்கூடிய பொருட்களின் மூலமாக தமிழ்மொழியை கற்பித்தல் வேண்டும்.

* இதுவே, இரண்டாவது மொழியாக தமிழ்மொழி கற்பித்தல் முறை ஆகும்.

9. தாய்மொழி சிந்திக்கும் ஆற்றலை எவ்வாறு வளர்க்கிறது?

* மாணவர்களுக்கு இளம் வயதிலிருந்தே சிந்தனை ஆற்றலை வளர்க்க வேண்டும்; இது ஆசிரியரின் முதற்கடமை ஆகும்.

* அதற்கு ஏற்ற கருவியாக இருப்பது தாய்மொழியே, பேசப்பெறும் சொல்லுக்கும்.

* அது குறிக்கும் பொருளுக்கும் பேசுவோர்க்கும் கேட்போர்க்கும் நேரடியான தொடர்பை உண்டாக்குவது மொழியே ஆகும்.

~~10. கலைத் திட்டத்தில் தா~~

10. சொற்களஞ்சியப் பெருக்கம் என்றால் என்ன?

* மாணவர்களுக்கு பொருள் விளங்கும் சொற்களின் எண்ணிக்கையை அதிகமாக்குதல் வேண்டும்.

* தொடக்க வகுப்புகளில் சிறப்பாக நாளும் நடைபெறும் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்தும், செய்தித்தாள்களிலிருந்தும் கிட்டும் சொற்களை அறிவதும்,

* மேல் வகுப்புகளில் இலக்கியங்களைப் படித்து இன்புறுவதற்கான அருஞ்சொற்களின் பொருளை அறிவதும்,

* மொழிப்பாட நோக்கங்களுள் ஒன்றாகக் கொள்ளலாம்.

Scanned by CamScanner